Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, SEPTEMBER 14, 2023

வியாழக்கிழமை செப்டெம்பர் 14, 2023 | ஒளி: 09 கதிர்: 084 | பக்கம்: 06 | வடக்கு,கிழக்கு | Free

# "கொல்கத்தா வாங்க"



கொல்கத்தாவில் நடைபெற உள்ள தொழில் முனைவோர் மாநாட்டில் பங்கேற்க வருமாறு இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இந்திய மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி நேரில் அழைப்பு விடுத்துள்ளார். மேற்கு வங்கத்தில் உள்ள கொல்கத்தாவில் நவம்பர் 21,22 ஆகிய திகதிகளில் தொழில் முனைவோர் மாநாடு நடைபெற உள்ளது.

தொடர்ச்சி P2



குத்தகைக்கு எடுத்தவர்களுக்கும்

# இராணுவத்துக்கும் குத்தி குளத்தில் கைகலப்பு

## இருவர் வைத்தியசாலையில் அனுமதி

■ செ.கீதாஞ்சன்

வவுனியா, கனகராயன் குளம் பகுதியில் உள்ள கரப்பு குத்தி குளத்தினுள் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட முயன்ற இராணுவத்தினருக்கும், குளத்தின் குத்தகைதாரர்களுக்கும் இடையில் இடம்பெற்ற கைகலப்பில் இருவர் மாங்குளம் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

தற்கொலை சஹரான்கள்

# கோட்டாவை கட்டி அணைத்திருப்பர்



■ ரஞ்சித் ராஜபக்ஷ

ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டின் ஜனாதிபதியாக வருவார் என சஹரான்கள் அறிந்திருந்தால் கோட்டாபய ராஜபக்ஷவை கட்டிப்பிடித்து, சஹரான்கள் மரணமடைந்திருப்பர் என்று தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினரும் முன்னாள் எம்.பியுமான சுனில் ஹதுன்நெத்தி தெரிவித்தார்.

மக்களின் ஊழியர் சேமலாப நிதி (EPF) ஊழியர் நம்பிக்கை நிதி (ETF) ஆகியவற்றை கொள்ளையடித்து, நிதி நிறுவனங்களை ஆபத்தில் ஆழ்த்தி, தேசிய வளங்களை ஏலம் விட்டு, மக்களை மேலும் நெருக்கடிக்குள் தள்ளும் அரசாங்கத்தின் திட்டம் தொடர்பில், கினிகத்தேன கூட்டுறவு கூட்ட மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை (12) நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே சுனில் ஹதுன்நெத்தி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

சர்வதேச விசாரணையைப் புறந்தள்ளி

# விசாரணைக் குழுக்களை அமைப்பதில் அர்த்தமில்லை

## நாடு மேலும் வங்குரோத்தாகும் என்கிறார் சுரேஷ்

■ எஸ்.நிதர்ஷன்



ஜனாபதியின் ஆணைக்குழுக்களின் ஊடாக, இலங்கை நாட்டின் மீது சர்வதேச நம்பகத்தன்மையை உருவாக்க முடியாவிட்டால் இலங்கை இழந்துபோன கௌரவத்தை மீளப்பெற முடியாவிட்டால், இந்த விசாரணைக் குழுக்கள் எல்லாம் அர்த்தமற்றதாகிவிடும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் பேச்சாளருமான சுரேஷ் க. பிரேமசந்திரன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# ஆபத்தான இருவருக்கு பல நிபந்தனைகளில் பிணை

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பில் 'ஆபத்தனவர்கள்' என்று பொலிஸாரால் வழக்குத் தொடரப்பட்ட இருவரையும் பல நிபந்தனைகளுடன் பிணையில் செல்ல மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் பீற்றர்போல் அனுமதியளித்தார்.

இருவரையும் ஒருவருட நீதிமன்ற சமூக சீர்திருத்த கண்காணிப்பிலும் குற்றம் இடம்பெறும் இடத்தில் இருக்கக் கூடாது என்றும் குற்றச் செயலில் ஈடுபடுவதோ, திருட்டு செயல்களில் ஈடுபடக் கூடாது எனவும் ஒவ்வொரு மாதமும் இறுதி ஞாயிற்றுக்கிழமை பொலிஸ் நிலையத்தில் கையெழுத்து இடவேண்டும் என நிபந்தனை விதித்தார்.

தொடர்ச்சி P2

ஜனாதிபதியின் செயலாளரால்

# அரச அதிகாரிகளுக்கு முக்கிய பணிப்புரை



நாட்டின் அபிவிருத்தி செயற்பாடுகளை திட்டமிடும் போது, அது தொடர்பில் மாவட்ட அபிவிருத்திக் குழு மற்றும் பிரதேச அபிவிருத்திக் குழு என்பவற்றுக்கு அறிவிக்குமாறு அரச அதிகாரிகளுக்கு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க பணிப்புரை விடுத்துள்ளார்.

அனைத்து அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஆகியோருக்கு கடிதம் மூலம், ஜனாதிபதியின் செயலாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



# கியூபாவுக்கு பறந்தார் ஜனாதிபதி:

## பதில் அமைச்சர்கள் நியமனம்

கியூபா மற்றும் அமெரிக்காவுக்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, புதன்கிழமை (13) அதிகாலை நாட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றதுடன், ஜனாதிபதி வெளிநாடு சென்றுள்ள காலப்பகுதியில் அவருக்கு கீழுள்ள அமைச்சுகளின் பொறுப்புகள் இராஜாங்க அமைச்சர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2



# அரோஹரா

வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவ தேர்த்திருவிழா, புதன்கிழமை (13) காலை மிகச் சிறப்பாக நடைபெற்றது. மேலும் படங்கள் (பக்கம் – 05)

# "ரஷ்யாவுக்கு ஆதரவளிப்பேன்"



அமெரிக்கா, ஜப்பான், தென் கொரியா ஆகிய நாடுகளுக்கு எதிராக செயற்பட்டு வரும் வட கொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடன் நடத்திய தனிப்பட்ட சந்திப்பு நிறைவடைந்தது.

ரஷ்யாவின் அழைப்பை ஏற்று அந்நாட்டுக்கு சென்றுள்ளார் வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன். பரஸ்பர நல்லுறவுக்காக சுமார் ஐந்து மணி நேர பேச்சுவார்த்தை நடைபெற்றது.

தொடர்ச்சி P2

# தாதியர் பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்



தாதியர் பயிற்சிக்காக 3,500 மாணவர்களை உள்வாங்குவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ள நிலையில், அதற்கான விண்ணப்பங்களை வெள்ளிக்கிழமை (15) முதல் ஒக்டோபர் 18 ஆம் திகதி வரை அனுப்பி வைக்க முடியும் என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



# யாழ். போதனாவில் ஸ்மார்ட் போனுக்கு தடை

■ எம்.றொசாந்த்

கடமை நேரத்தில் தாதியர்கள், சுகாதார உதவியாளர்கள், பாதுகாப்பு பணியாளர்கள் மற்றும் நோயாளர் பராமரிப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் ஆகியோர் திறன்பேசிகளை (ஸ்மார்ட் போன்) பயன்படுத்த யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தடைவிதித்துள்ளார்.

தொடர்ச்சி P2

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் விவகாரம்:

# ஹரீனுக்கு எதிரான விசாரணையை முடிக்குமாறு பொலிஸுக்கு பணிப்பு

## உயர்நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் அறிவிப்பு




ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் பதிவு செய்த அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோவுக்கு எதிரான விசாரணைகளை முடிக்குமாறு பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக சட்டமா அதிபர் உயர்நீதிமன்றத்தில், புதன்கிழமை (13) அறிவித்தார்.

தம்மை கைது செய்வதை தடுக்கும் உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி ஹரின் பெர்னாண்டோவால் அடிப்படை உரிமைகள் மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டது.

தொடர்ச்சி P2

# குரங்கு ஏற்றுமதி விவகாரம்: மனு விசாரணை நிறைவு



இலங்கையின் 'டோக் மக்காக்' குரங்குகள் சீனாவுக்கு அனுப்பப்பட மாட்டாது என்று அரசாங்கம் உறுதியளித்த நிலையில், குரங்கு ஏற்றுமதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையை நிறைவு செய்வதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

100 இலட்சம் டோக் மக்காக் குரங்குகளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்ய முன்மொழியப்பட்டதை எதிர்த்து, இலங்கையின் வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்புச் சங்கம் உட்பட 30 மனுதாரர்களால், ஏற்றுமதி செய்வதற்கான எந்தவொரு முடிவையும் முடக்கி, ஆவணக் கேட்பு நீதிப் பேராணை மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

டோக் மக்காக் குரங்குகளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர முன்னர் தெரிவித்திருந்த கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2

# நாளாந்தம் தானியங்கி முறையில் விலைத்திருத்தம்



அடுத்த வருடம் முதல் நாளாந்தம் தானியங்கி எரிபொருள் விலை திருத்த முறையை நடைமுறைப்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர

தொடர்ச்சி P2

# 32 ரயில் நிலையங்களில் இராணுவம் குவிப்பு

## வேலை நிறுத்தம் தொடர்கிறது

ரயில் நிலையங்களில் ஏற்படும் சனநெரிசலைக் கட்டுப்படுத்தும் நோக்கிலும் பயணிகள் மற்றும் ரயில்வே ஊழியர்களிடையே மோதல்களைத் தடுக்கும் நோக்கிலும் கோட்டை, மருதானை உள்ளிட்ட முப்பத்திரண்டு ரயில் நிலையங்களில், புதன்கிழமை (13) இராணுவத்தினர் குவிக்கப்பட்டனர்.

மேற்குறிப்பிட்ட காரணங்களுடன், வேலை நிறுத்தத்தின் போது பணியில் இருக்கும் ஊழியர்களைப் பாதுகாக்கவும், பொலிஸ் அதிகாரிகளுக்கு உதவுவதற்குமே இராணுவ உதவி கோரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## இராணுவத்துக்கும் குத்தி...

செவ்வாய்கிழமை (12) இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது: கரப்புக்குத்தியில் அமைந்துள்ள குளத்தில் மீன்பிடிப்பதற்காக விலை மனுக்கோரல் அடிப்படையில், குறித்த கிராமத்தைச் சேர்ந்த ஒருவரால் குத்தகைக்கு எடுக்கப்பட்டுள்ள நிலையில், கரப்புக்குத்தி இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர், வலைகளைப் போட்டு சட்டவிரோதமாக குளத்தில் மீன்பிடியில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

குளத்தை குத்தகைக்கு எடுத்தவர்களால் மீன்பிடிக்க வேண்டாம் என்று இராணுவத்துக்கு தெரியப்படுத்தியபோதும், செவ்வாய் இரவு 9 மணியளவில் மீண்டும் இராணுவத்தினர் வாள்களுடன் மீன்பிடியில் ஈடுபட வந்துள்ளனர். இதனை அறிந்து அப்பகுதிக்கு சென்ற குளத்தைக் குத்தகைக்கு எடுத்த பயனாளியும் அவரது நண்பர்களும் "மீன்பிடிக்க வேண்டாம்" என இராணுவத்தை மறித்துள்ளனர்.

அதன்போது, இராணுவத்தினர் தமது கையிலிருந்த வாள்களால் இவர்களது முதுகிலும் முள்ளந்தண்டின் கீழ்பகுதியிலும் தாக்கினர். இதன்போது, கரப்புக் குத்தியைச் சேர்ந்த சிறிதரன் சுஜீபன் (29) எனும் இளைஞன் காயமடைந்தார்.

மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதுடன், இராணுவத்தை சேர்ந்த ஒருவரும் மாங்குளம் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அரச அதிகாரிகளுக்கு...

அரச மற்றும் அரை-அரச நிறுவனங்களால், மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை தயாரித்து, செயற்படுத்தும் போது அது குறித்து, மாவட்ட அபிவிருத்திக் குழு மற்றும் பிரதேச அபிவிருத்திக் குழுக்களுக்கு அறிவிக்காமையால் அரச அதிகாரிகளுக்கும் அரசியல் பிரதிநிதிகளுக்கும் இடையில் இடைவெளி ஏற்பட்டுள்ளது.

மேலும், மாவட்ட அபிவிருத்திக் குழு மற்றும் பிரதேச அபிவிருத்திக் குழுக்களின் தலைவர்கள் இது தொடர்பில் ஜனாதிபதிக்கு தொடர்ச்சியாக முறைப்பாடுகளை சமர்ப்பித்து வருவதுடன், அரச அதிகாரிகளுக்கும், அரசியல் பிரதிநிதிகளுக்குமிடையிலான தொடர்பு இன்மையால் ஏற்பட்டுள்ள பல்வேறு பிரச்சினைகளால் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஏற்பட்டுள்ள தடைகள் தொடர்பிலும் ஜனாதிபதியின் செயலாளர் கவனம் செலுத்தியுள்ளார். இதன்படி, இந்த நடவடிக்கைகளின்போது, அரச அதிகாரிகளுக்கும் அரசியல் பிரதிநிதிகளுக்கும் இடையில் முறையான ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் நோக்கில் ஜனாதிபதியின் செயலாளர் இந்த பணிப்புரைகளை வழங்கியுள்ளார்.

## தாதியர் பயிற்சிக்கு...

2019, 2020 ஆம் ஆண்டு உயர் தர பரீட்சையில் உயிரியல் பிரிவில் சித்தியடைந்த மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதேவேளை, தாதியர் கற்கைநெறியை பூர்த்தி செய்த ஆயிரம் தாதியர்களை சேவையில் இணைத்துக்கொள்ள சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

தாதியர் கற்கைநெறியை நிறைவு செய்த 2 ஆயிரத்துக்கும் அதிகமானோர் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

## நாளாந்தம் தானியங்கி....

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகள், விநியோகஸ்தர்கள் மற்றும் ஏனைய சங்கங்களுக்கும் அமைச்சருக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அனைத்து எரிபொருள் விநியோகம், புதிய உபகரணங்களுடன் சரக்கு எடுக்கும் வசதிகள் மற்றும் நாளாந்த தானியங்கி விலை திருத்த முறையை நடைமுறைப்படுத்த கூட்டுத்தாபனத்தின் திட்டங்கள் குறித்து விநியோகஸ்தர்களுக்கு விளக்கமளித்ததாக அமைச்சர் கூறினார்.

எரிபொருள் விநியோகஸ்தர்களின் விற்பனை கொடுப்பனவு, புதிய எரிபொருள் நிலையங்களை நிர்மாணித்தல் மற்றும் மசகு எண்ணெய் விற்பனை தொடர்பாக தொடரப்பட்டுள்ள வழக்குகளுக்கு தீர்வு காண்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

# கோட்டாவை கட்டி அணைத்திருப்பர்

மக்கள் பிரச்சினை தொடர்பில் நாமல் ராஜபக்ஷவுக்கு எந்த பிரச்சினையும் இல்லை, சஜித் பிரேமதாஸவுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. பாராளுமன்றத்தில் உள்ள எமது தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்களை தவிர, யாருக்கும் எந்தப் பிரச்சினையும் இல்லை. தொலைக்காட்சியில் வரும் போது மைத்திரிபாலவின் பகிடிகளை பாருங்கள். அவர் தனது கட்சியின் பிரச்சினைகளை மட்டுமே பேசுகிறார். நாட்டின் பொருளாதாரம், உணவுப் பிரச்சினை, மருந்துப் பிரச்சினைகளைப் பற்றி பேசுவதில்லை என்றார்.

இந்நாள்களில் சனல் 4 காணொளியை தவிர மற்ற சனல்கள் மூடப்படுகின்றன. பொருட்களின் விலைக்கு சனல் இல்லை; எரிபொருளுக்கு சனல் இல்லை; பஸ் கட்டணத்திற்கு சனல் இல்லை; மக்கள் பிரச்சினைகளை எந்த சனல்களும் பேசுவதில்லை. தொழில் வல்லுநர்கள் நாட்டை விட்டு வெளியேறுவது பற்றி பேசுவதில்லை என்றும் குறிப்பிட்டார்.

சனல் 4வை பிடித்துக்குக் கொண்டு அரசியல் ரீதியாக தொங்கிக் கொண்டிருக்கின்றனர். அதற்கு நாமல் ராஜபக்ஷவிடம் நல்ல பதில்கள் உள்ளன. கோட்டாபய ராஜபக்ஷவை பதவிக்கு கொண்டு வர யாராவது தற்கொலை செய்து கொள்வார்களா என்று கேட்கின்றார்.

தங்களுடைய மரணங்களால்தான் கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வருவார் என்று மரணித்த சஹ்ரானின்களுக்கு தெரிந்திருந்தால், தாங்கள் மட்டும் சாக மாட்டோம் என்று கோட்டாபய ராஜபக்ஷவை கட்டிப்பிடித்து மரணித்து இருப்பார்கள் என தெரிவித்தார்.

பின்னர் அவர்கள் நாட்டு நலனுக்காக இறக்கிறார்கள் என்று சொன்னால், அதுதான் அரசியல் தந்திரங்கள்; அரசியல் விளையாட்டுகள் என்று பழைமையானவர்கள் கூறுகின்றனர்.

இது இவ்வளவு கேவலமான நாடு; பதவிக்கு வருவதற்கு இன பேதங்களை உருவாக்கி, கேவலமான அரசியல் செய்கின்றனர். குறைந்த பட்சம் அவர்களுக்கு வருத்தம் இல்லை; வெட்கம் இல்லை; மனசாட்சி இல்லை. இந்த நாடு செல்லும் வழியை நிறுத்த வேண்டுமா இல்லையா? என்று கேட்பவர்கள் முதலில் இந்த அரசியல் அமைப்பை மாற்ற வேண்டும் என்கின்றனர் என்றும் சுனில் ஹந்துநெத்தி தெரிவித்தார்.

## "கொல்கத்தா வாங்க"

இதையொட்டி மாநிலத்திற்காக முதலீடுகளை ஈர்ப்பதற்காக மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி, 12 நாள் பயணமாக டுபாய் மற்றும் ஸ்பெயினுக்குச் சென்றுள்ளார்.

டுபாய் விமான நிலையத்தில் புதன்கிழமை (13) அவர், இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து பேசினார்.

விமான நிலைய ஓய்வறையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின் போது, மேற்கு வங்கத்தில் நவம்பரில் நடைபெறும் தொழில் முனைவோர் மாநாட்டில் பங்கேற்குமாறு ரணில் விக்கிரமசிங்கவை மம்தா அழைத்துள்ளார்.

## விசாரணைக் குழுக்களை அமைப்பதில் அர்த்தமில்லை

தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட யுத்தக்குற்றங்கள், மனித உரிமைகள் மீறல், அத்துடன் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணைகளை நிராகரிப்பதாகவும் இலங்கை தொடர்பான ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தின் அனைத்து பரிந்துரைகளையும் நிராகரிப்பதாகவும் இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளதாகவும் அரசாங்கத்தின் இத்தகைய செயற்பாடுகள் நாட்டை மேலும் வங்குரோத்து நிலைமைக்கே இட்டுச் செல்லும் என்றும் குறிப்பிட்டார்.

இது குறித்து புதன்கிழமை (13) அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் பற்றி விசாரணைகளை நடத்துவதற்காக பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றும் நீதிபதிகளை உள்ளடக்கிய விசாரணைக்குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது.

இந்தக் குழுக்களின் அறிக்கைகள் முழுமையாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கோ அல்லது பொதுமக்களுக்கோ வெளியிடப்படவில்லை. அவற்றை முழுமையாக வெளியிட முடியாது என்று கூறியுமிருந்தனர்.

பின்னர் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக வந்தபொழுது அவரும் ஒரு விசாரணைக்குழுவை நியமித்தார். அதிலும் எத்தகைய வெளிப்படைத்தன்மையும் இல்லை. மக்களுக்கும் அதுபற்றி எதுவும் தெரியாது.

இப்பொழுது மூன்றாவது முறையாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை நியமிக்க இருப்பதுடன், நீதிபதிகளை உள்ளடக்கிய மற்றொரு விசாரணைக்குழுவையும் நியமிக்க உள்ளார். ஜனாதிபதியானவர் பாதுகாப்புத்துறையின் அமைச்சராகவும் இருக்கிறார்.

ஆனால் ஈஸ்டர் ஞாயிறு தொடர்பாக சனல்4 வெளியிட்ட ஆவணக் காணொளியை பாதுகாப்பு அமைச்சு முற்றாக நிராகரிப்பதாகக் கூறியுள்ள நிலையில், ஜனாதிபதி மறுபுறத்தில் அதற்கான விசாரணை ஆணைக்குழுக்களை நியமிப்பது வேடிக்கையாகவும் முரண்நகையாகவும் இருக்கின்றது.

ஏற்கெனவே சிங்கள தரப்பில் பல்வேறு கட்சித்தலைவர்களும் பொது அமைப்புகளின் தலைவர்களும் தமிழர் தரப்புகளும் சர்வதேச விசாரணையைக் கோரியுள்ள ஒரு சூழ்நிலையில், மீண்டும் மீண்டும் பல மில்லியன் ரூபாய் மக்களின் வரிப்பணத்தைச் செலவு செய்து, விசாரணைக்குழுக்களை அமைப்பது அர்த்தமற்றதும் காலத்தை வீணடிக்கும் செயலுமாகும்.

யுத்தத்திற்குப் பின்னர், போர்க்குற்றங்கள் தொடர்பாகவும், மனித உரிமைகள் மீறல் தொடர்பாகவும் தமிழ் மக்கள் ஒரு சர்வதேச விசாரணையை இன்றுவரை கோரிவருகின்றனர்.

இந்தியா போன்ற அயல் நாடுகளும் நேரடியாகவும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஊடாகவும் தமிழ் மக்களின் கௌரவம் பாதுகாக்கப்பட வேண்டும்; சமத்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்; அவர்களது அபிலாஷைகளைத் தீர்க்கக்கூடிய வகையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்பட வேண்டும் என்பதுடன், மாகாண சபைத் தேர்தலை நடத்தி 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் மீண்டும் மீண்டும் சர்வதேச அரங்குகளில் சுட்டிக்காட்டி வருகின்றன.

ஆனால் இலங்கை அரசாங்கமோ இவற்றைக் காலதாமதப்படுத்துவதிலும் ஒத்தி வைப்பதிலும் தேர்தல்களை நடத்தாமல் இழுத்தடிக்கும் நடவடிக்கைகளிலுமே ஈடுபட்டு வருகின்றது எனக் குறிப்பிடப்பட்டு உள்ளது.

## கியூபாவுக்கு பறந்தார்...

இதன்படி, இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன், பதில் பாதுகாப்பு அமைச்சராகவும், இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, பதில் நிதி அமைச்சராகவும், இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத், தொழில்நுட்ப மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு பதில் அமைச்சராகவும், இராஜாங்க அமைச்சர் அனுப பெஸ்குவல் பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் பதில் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

செப்டெம்பர் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் கியூபாவின் ஹவானாவில் நடைபெறவுள்ள 'ஜீ77 குழு + சீனா' அரச தலைவர்களின் உச்சி மாநாட்டில் உரையாற்றுவதற்காக ஜனாதிபதி, கியூபாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

'தற்போதைய அபிவிருத்தி சவால்களில் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகளின் பங்கு' என்ற தலைப்பில் மாநாடு இடம்பெறவுள்ளது.

இலங்கை மற்றும் கியூபா இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்தும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் கியூபா ஜனாதிபதிக்கும் இடையில் இருதரப்பு பேச்சு வார்த்தையும் நடைபெறவுள்ளது.

அதன் பின்னர் அவர், ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக அமெரிக்காவுக்கு பயணமாகவுள்ளார்.

## "ரஷ்யாவுக்கு ஆதரவளிப்பேன்"

ரஷ்யாவின் முக்கிய விண்வெளி மையமான வோஸ்டோச்னி காஸ்மோடிரோம் தளத்தில் வட கொரிய ஜனாதிபதியை வரவேற்ற புட்டின், அங்குள்ள பல முக்கிய அம்சங்களை வட கொரிய ஜனாதிபதிக்கு சுற்றி காண்பித்தார்.

> **"ரஷ்யா தனது பாதுகாப்புக்காக மேற்கொண்டு வரும் புனித போரில், அந்நாட்டிற்கு தேவைப்படும் முழுமையான, நிபந்தனையற்ற ஆதரவை வட கொரியா வழங்கும்" என கிம் ஜாங் உன் அறிவித்தார்**

இதற்கு பிறகு தூதர்கள் அளவிலான சந்திப்புகள் நடைபெற்றன. இருவரின் இந்தத் தனிப்பட்ட சந்திப்பிற்கு முன்னதாக ரஷ்ய-உக்ரேன் போரை மறைமுகமாக குறிப்பிடும் விதமாக, "ரஷ்யா தனது பாதுகாப்புக்காக மேற்கொண்டு வரும் புனித போரில், அந்நாட்டிற்கு தேவைப்படும் முழுமையான, நிபந்தனையற்ற ஆதரவை வட கொரியா வழங்கும்" என கிம் ஜாங் உன் அறிவித்தார்.

## யாழ். போதனாவில்...

யாழ்.போதனா வைத்தியசாலையில், சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட 08 வயது சிறுமிக்கு தவறான முறையில் 'கனுலா' பொருத்தப்பட்டமையால், சிறுமியின் இடது கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்டது.

அது தொடர்பிலான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், தாதியர்களின் கவன குறைவாலையே சிறுமியின் கை அகற்றப்பட்டது எனப் பல தரப்பினராலும், குற்றம் சாட்டப்பட்டு வரும் நிலையில் பணிப்பாளரால், திறன்பேசிகளை பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

## குரங்கு ஏற்றுமதி...

இலங்கை டோக் மக்காக் குரங்குகள் சீனாவுக்கு அனுப்பப்பட மாட்டாது என்று வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்தின் சார்பிலே திறந்த நீதிமன்றத்தில் அஜரான சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் கடந்த ஜூன் மாதம் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஹரீனுக்கு எதிரான விசாரணையை முடிக்குமாறு பொலிஸுக்கு பணிப்பு

குறித்த மனு, புவனேக அலுவிஹாரே, பிரீத்தி பத்மன் சூரசேன, ஜனக் டி சில்வா ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது, சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலிப பீரிஸ் மேற்கண்டவாறு அறிவித்தார். பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைக் கோப்புகளை ஆராய்ந்த சட்டமா அதிபர், இது தொடர்பான விசாரணையை முடிக்குமாறு மனுதாரர் ஹரின் பெர்னாண்டோவிடம் ஜூன் 20ஆம் திகதி பணிப்புரை விடுத்ததாக மன்றுக்கு அறிவிக்கப்பட்டது.

மனுவை முன்கொண்டு செல்வதா இல்லையா என்பது குறித்து நீதியரசர் ஜனக் டி சில்வா அங்கம் வகிக்கும் நீதியரசர்கள் குழாம் முன்னிலையில், மனுவை எதிர்வரும் 18ஆம் திகதி பரிசீலிப்பதற்கு நீதின்றம் திகதி நிர்ணயித்தது.

# ஆபத்தான இருவருக்கு பல நிபந்தனைகளில் பிணை

இருவரையும் நன்னடத்தை கொண்ட தலா ஒரு இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் செல்ல நீதவான் பீற்றர்போல் திங்கட்கிழமை (11) அனுமதியளித்தார்.

மட்டு. தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள புதூர் பிரதேசத்தில் 24, 26 வயதுடைய இருவர் தொடர்ந்து திருட்டு மற்றும் வழிப்பறி கொள்ளை, கூலிக்கு ஆட்களை அடிப்பது, ஆட்களை வாளால் வெட்டுவது போன்ற பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு வந்துள்ளதுடன் இவர்களுக்கு

> **புதூரில் 24, 26 வயதுடைய இருவர் தொடர்ந்து திருட்டு, வழிப்பறி கொள்ளை, கூலிக்கு ஆட்களை அடிப்பது, வாளால் வெட்டுவது போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட்டு வந்தால் இவர்கள் 'ஆபத்தானவர்கள்' என்ற அடிப்படையில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது**

எதிராக பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில், இந்த இருவரும் 'ஆபத்தானவர்கள்' என்ற அடிப்படையில் இவர்கள் இருவர் மீதும் குற்றவியல் நடவடிக்கை சட்டக்கோவை 83ஆம் பிரிவின் கீழ் பொலிஸாரால் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, ஒவ்வொரு மாதமும் இறுதி ஞாயிற்றுக்கிழமையில் மாலை 4 மணி தொடக்கம் 6 மணிக்குள் மட்டு. தலைமையக பொலிஸ் நிலையத்தில் கையெழுத்து இடவேண்டும் எனவும் மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளுடனும் பிணை வழங்கப்பட்டது.

# 32 ரயில் நிலையங்களில் இராணுவம் குவிப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செவ்வாய்க்கிழமை (12) முதல் ரயில் சேவையை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தியிருந்தார்.

எனினும், சம்பள அதிகரிப்பு, பதவி உயர்வு, ஆட்சேர்ப்பு தொடர்பான பிரச்சினைகள் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து 11ஆம் திகதி நள்ளிரவு முதல் ஆரம்பிக்கப்பட்ட வேலைநிறுத்தத்தை தொடர்வதாக லோக்கோமோட்டிவ் இயந்திர சாரதிகள் சங்கம் தெரிவித்தது.

அரசு மற்றும் தனியார் துறை ஊழியர்கள் முதல் ஆசிரியர்கள், மாணவர்கள், அரச வைத்தியசாலைகளில் கிளினிக்குகளுக்கு வரும் நோயாளிகள் எனப் பயணிகள் ரயில் இரத்து மற்றும் தாமதம் குறித்து விசனங்களை தெரிவித்தனர்.

வேலை நிறுத்தம் காரணமாக, புதன்கிழமை (13) 13 ரயில்கள் இரத்து செய்யப்பட்டதாகவும் 40 அலுவலக ரயில் சேவைகள் இடம்பெறும் என்றும் ரயில்வே திணைக்களம் அறிவித்த போதிலும் காலை, மாலை வேளைகளில் ரயில் நடைமேடைகள் அதிக நெரிசலாக இருந்ததை அவதானிக்க முடிந்தது.

பொன்னாவெளி விவசாய நிலங்களில் சீமெந்து தொழிற்சாலை:

# 42ஆவது நாளாகத் தொடரும் மக்களின் போராட்டம்

## அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் அசமந்தம்

எஸ். றொசேரியன் லெம்பேட்

கிளிநொச்சி, கிராஞ்சி பிரதேச செயலக பிரிவில் உள்ள பொன்னாவெளி கிராமசேவகர் பிரிவுக்கு உட்பட்ட மக்களின் விவசாய நிலங்களை ஆக்கிரமித்து அமைக்கப்படவுள்ள சீமெந்து தொழிற்சாலைக்கு எதிராக, நேற்று புதன்கிழமை 42 ஆவது நாளாக போராட்டம் இடம்பெற்று வருகிறது.

ஏற்கெனவே தனியார் நிறுவனங்களால் இப்பகுதியில் அமைக்கப்பட்ட 40க்கு மேற்பட்ட கிணறுகளாலும் குடிநீர் செயற்றிட்டத்தாலும் மக்கள் குடிநீர் இன்றி அவதிப்படுவதாகவும் தற்போது சீமெந்து தொழிற்சாலைக்காக இப்பகுதியில் சுண்ணக்கற்கள் அகழ்வு இடம்பெறுவதாகவும் இதனால் நன்னீர் உவர் நீராக மாறி வருவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.



அதேநேரம் 40 நாள்களுக்கு மேலாக தாங்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாகவும் பல்வேறு பொறுப்பு வாய்ந்த அரச நிறுவனங்களுக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உட்பட பலருக்கும் தெரியப்படுத்திய போதிலும் இதுவரை தங்கள் முறைப்பாடுகளுக்கு சாதகமான பதில் வழங்கவில்லை எனவும் குற்றம் சுமத்தினர்.

இந்த நிலையில், 'மெசிடோ' நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் (12) குறித்த போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை சந்தித்தனர். தமக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை, தமது போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

## வெற்றுப் போத்தல்களை சேகரிக்கும் விழிப்பூட்டல்



வ.சக்தி

பீடை நாசினி, களைநாசினிகள் மற்றும் பாவிக்கப்பட்ட வெற்றுப் போத்தல்களை சேகரிக்கும் விழிப்பூட்டல் நிகழ்வு, நேற்று (13) களுதாவளை விவசாய போதனாசிரியர் பொ. சிறிபவனின் தலைமையில் களுதாவளையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பீடைநாசினிகள் பதிவாளர் நாயகம் கலாநிதி சுமித், மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் வி. பேரின்பராசா, மட்டக்களப்பு தெற்கு வலய உதவி விவசாய பணிப்பாளர் சி. சித்திரவேல், 'குறொப்லைவ்' கூட்டுநிறுவன இணைப்பாளர் யூ.ஆ சுக்கிரி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு விளக்கமளித்தனர்.

பீடைநாசினிகள், பாவிக்கப்பட்ட வெற்றுக்கொள்கலன்கள் என்பன நாம் வாழும் சூழலுக்கும் கால்நடைகளுக்கும் பறவைகளுக்கும் தீங்கு ஏற்படுத்துவதுடன், டெங்கு போன்ற கொடிய நோய்கள் பெருக்குவதற்கும் முக்கிய காரணிகளாகக் காணப்படுகின்றன. எனவே, விவசாயிகள் பயிர்களுக்குப் பாவித்து விட்டு வீசுகின்ற வெற்றுப் போத்தல்கள், கொள்கலன்கள் போன்றவற்றைச் சேகரிக்க வேண்டியது ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும் என பீடை நாசினிகள் பதிவாளர் நாயகம் கலாநிதி சுமித் இதன்போது தெரிவித்தார்.

## பெண் தொழிலதிபரை கடத்தியவர் கைது

பெண் தொழிலதிபர் ஒருவரை பலவந்தமாக கடத்திச் சென்று வீட்டுக்குள் அடைத்து வைத்து கொலை மிரட்டல் விடுத்து பணம், தங்கம், கார் மற்றும் 3 இலட்சத்திற்கும் அதிகமான பணம் ஆகியவற்றை கொள்ளையடித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாக நொச்சியாகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அநுராதபுரம், தலாவ, குமார எலிய பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அநுராதபுரம், குருந்தன்குளம் என்ற இடத்தை வசிப்பிடமாகக் கொண்ட 48 வயதுடைய பெண் ஒருவர் செய்த முறைப்பாட்டின் பிரகாரம், விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

கணவரிடமிருந்து சட்டரீதியாகப் பிரிந்து பண்டாரவளையில் வியாபாரம் செய்து வரும் முறைப்பாட்டாளரான இப்பெண், அநுராதபுரம், குருந்தன்குளம், மிஹிந்தலை ஆகிய பகுதிகளில் மளிகைக் கடை, உணவகம், அறை வாடகைக்கு விடுதல் போன்ற வியாபாரங்களை நடத்தி வருகின்றார்.

சுமார் ஆறு மாதங்களுக்கு முன்னர், உணவகத்துக்கு வந்த நபர், வேலைவாய்ப்பு கேட்டுள்ளார். அவரே வர்த்தகரான அந்தப் பெண்ணைக் கடத்திச் சென்று, கழுத்தில் கத்தியை வைத்து அச்சுறுத்தி, கொள்ளையடித்துச் சென்றதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## புதையல் தோண்டிய பெண்கள் இருவர் உட்பட நால்வர் கைது

பி.கேதீஸ்

கிடைத்த தகவலுக்கு அமைய, கொத்மலை, பிரதேசத்திலுள்ள பழைய கோவிலுக்கு அருகாமையிலுள்ள வனப்பகுதிக்கு திங்கட்கிழமை (11) விரைந்த விசேட அதிரடிப்படையினர், அங்கு புதையல் தோண்டிக்கொண்டிருந்த இரண்டு பெண்கள் உட்பட நால்வரை கைது செய்துள்ளனர்.

அவர்கள், புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்திய முள், மண்வெட்டி, இன்னும் பல கருவிகள் மற்றும் உபகரணங்களை கைப்பற்றினர். கைது



செய்யப்பட்டவர்களில் மூவர் அநுராதபுரத்தைச் சேர்ந்தவர்கள். ஒருவர் வெல்லாவைச் பகுதியைச் சேர்ந்தவர் ஆவர்.

சந்தேகநபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்த பூண்டுலோயா பொலிஸார், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

## குடும்ப ஓட்டோ பாய்ந்தது; மூவருக்கும் காயம்

செ.தி பெருமாள், ரஞ்சித் ராஜபக்‌ஷ

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பயணித்த ஓட்டோ வீதியை விட்டு விலகி, பள்ளத்தில் விழுந்ததில் ஓட்டோவில் பயணித்த ஒன்றரை வயது குழந்தை, அதன் தாய், தந்தை (ஓட்டோவின் சாரதி) ஆகியோர் காயமடைந்து டிக்கோயா-கிளங்கன் ஆரம்ப வைத்தியசாலையில் புதன்கிழமை (13) அனுமதிக்கப்பட்டு உள்ளனர் என நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

பொவந்தலாவ மோரா தோட்டத்திலிருந்து ஹட்டன் நோக்கி பயணித்த ஓட்டோ, நோர்வூட் சென் ஜோன் டில்லரி தோட்ட பகுதியில் வீதியை விட்டு விலகி, சுமார் 50 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்கு உள்ளாகியது.

விபத்தில் ஓட்டோ பாரியளவில் சேதமடைந்துள்ளதுடன், விபத்து தொடர்பில் நோர்வூட் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில்

## கண் வெண்படலம் அகற்றும் சிகிச்சை முகாம்

### ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறும்

எம்.எஸ்.எம் நூர்தீன்

சவூதிஅரேபிய அரசின் ஏற்பாட்டில், காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் கண் வெண்படலம் அகற்றும் கண் சத்திர சிகிச்சை முகாம் நேற்று (13) ஆரம்பிக்கப்பட்டது.

சவூதிஅரேபியாவின் மன்னர் சல்மானின் மனிதாபிமான உதவி மற்றும் நிவாரண மையத்தின் ஊடாக, இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் ஹாலித் பின் மஹ்மூத் அல் கஹ்தானியின் மேற்பார்வையில், ஐக்கிய ராஜ்ய அல் பசர் நிறுவனத்தால், பாகிஸ்தானை சேர்ந்த கண் சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர்களால் இந்தக் கண் சத்திர சிகிச்சை முகாம் நடைபெறுகின்றது.

இலங்கை முஸ்லிம் வாலிபர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் அதன் தலைவரும் சபாப் நிறுவனத்தின் தலைவருமான மௌலவி தாஸீமின் ஒருங்கிணைப்பில் நடைபெறும் இந்தக் கண் வெண்படலம் அகற்றும் சிகிச்சை முகாம், ஞாயிற்றுக்கிழமை (17) வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



பதிவு செய்யப்படாத

## டியூட்டரிகள் மீது சட்ட நடவடிக்கை

### கல்முனை மாநகர சபை அறிவிப்பு

ஏ.எஸ் மௌலானா



கல்முனை மாநகர சபை எல்லைக்குள் இயங்கி வருகின்ற அனைத்து தனியார் கல்வி நிலையங்களும் எதிர்வரும் 22ஆம் திகதிக்கு முன்னதாக, மாநகர சபையில் பதிவு செய்யப்பட வேண்டும் என மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம் அஸ்மி அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று (13) வெளியிட்டுள்ள விசேட அறிவித்தலில் குறிப்பிடப்பட்டு உள்ளதாவது; கல்முனை மாநகர சபை எல்லைக்குள் இயங்கி வருகின்ற பல தனியார் கல்வி நிலையங்கள், இன்னும் தம்மை பதிவு செய்து கொள்ளாமல் இயங்கி வருவது கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாறு மாநகர சபையில் பதிவு செய்யாமல் இயங்குவது சட்டவிரோத செயற்பாடாகும். அனைத்து தனியார் கல்வி நிலையங்களையும் ஒரே குடையின் கீழ் கொண்டு வந்து, அவற்றை கட்டுக்கோப்புடன் முறையாக ஒழுங்குபடுத்துவதற்கு மாநகர சபை நடவடிக்கை எடுத்து வருகின்றது.

எனவே, இதுவரை பதிவு செய்யாத தனியார் கல்வி நிலையங்கள் அனைத்தும் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னதாக மாநகர சபையில் பதிவு செய்யப்பட வேண்டும் என்று இத்தால் அறிவுறுத்தப்படுகிறது என குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்று 75 ஆவது அகவையில்

## மூத்த பத்திரிகையாளர் சலீம்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில், அரை நூற்றாண்டுக்கும் அதிகமான காலமாக, பிராந்திய செய்தியாளர்களாக பணியாற்றிவருபவர்கள் என்று, இன்று ஒரு சிலரே இருக்கிறார்கள்.

கிழக்கு மாகாணத்தில், அதுவும் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் அத்தகைய நீண்டகால அனுபவமுடைய பத்திரிகையாளராக ஏ.எல். எம் சலீம் அவர்களை குறிப்பிட முடியும்.

தொடர்ந்தும் துடிப்புடன் பணியாற்றிவரும் ஏ.எல். எம் சலீம், இன்று 75 ஆவது அகவையில் பிரவேசிக்கிறார். அவரை ஆரோக்கியத்துடன் நீடூழி வாழவும் ஊடகத்துறைக்கு மேலும் பயனுறுதியுடைய பங்களிப்பைச் செய்யவும் வாழ்த்துவோம்.

**வெறுமனே ஒரு செய்தியாளராக மாத்திரமல்ல, பத்திரிகையாளர்களுக்கு இருக்கவேண்டிய சமூகப் பிரக்ஞையின் பால் மிகுந்த சிரத்தை காட்டி, தனது பணிகளை சலீம் முன்னெடுத்து வந்திருக்கிறார்**

நிந்தவூரைச் சேர்ந்த சலீம், 1966 ஆம் ஆண்டு 'வீரகேசரி'யின் செய்தியாளராக பத்திரிகைத்துறையில் பிரவேசம் செய்தார். பிறகு 'சுதந்திரன்', 'தினகரன்', 'தினபதி', 'சிந்தாமணி', 'தினக்குரல்' என்று பல பத்திரிகைகளின் பிராந்திய செய்தியாளராக பணியாற்றி, தனது சேவையை விரிவுபடுத்தினார். யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் 'உதயன்' தினசரியின் அம்பாறை மாவட்டச் செய்தியாளராக அதன் தொடக்ககாலம் முதலிருந்தே சலீம் பணியாற்றிவருகிறார். இதனிடையே, அவரின் பணியின் தரம் கண்டு, சில இலத்திரனியல் ஊடகங்களும் கூட அவரது சேவையை நாடின.

இலங்கையின் தமிழ்ப் பத்திரிகைத் துறையில் வளமான ஒரு மரபை விட்டுச் சென்ற புகழ்பூத்த பத்திரிகை ஆசிரியர்களான அமரர்கள் எஸ்.டி சிவநாயகம், ஆர். சிவகுருநாதன், கே. சிவப்பிரகாசம், ஆ.சிவனேசச்செல்வன், எஸ். நடராசா, கே.கே இரத்தினசிங்கம், கானமயில்நாதன் ஆகியோரின் காலத்தில், அவர்களின் வழிநடத்தலில் பணியாற்றிய சலீம்,



இன்றைய இளம் பத்திரிகை ஆசிரியர்களின் காலத்திலும் பிராந்திய செய்தியாளராக தொடருகிறார்.

தகவல் தொழில்நுட்பத்தின் அபார வளர்ச்சி காரணமாக, பத்திரிகையாளர்களின் செயற்பாட்டு முறைகளில் நவீன கருவிகளைப் பயன்படுத்தி கடைப்பிடிக்க வேண்டியிருக்கும் மாற்றங்களுக்குத் தன்னை இசைவாக்கிக் கொண்டு, தங்கள் பணியை தொடர்ந்தும் செய்துவரும் தமிழ்பேசும் பத்திரிகையாளர்களில் சலீமும் ஒருவர் எனலாம்.

வெறுமனே பிராந்திய செய்திகளை மாத்திரம் அனுப்பும் ஒரு செய்தியாளராக மாத்திரமல்ல, அரசியல், சமூகப் பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்த பெருவாரியான கட்டுரைகளையும் சலீம் எழுதிவந்திருக்கிறார். பத்திரிகையாளர்களுக்கு இருக்கவேண்டிய சமூகப் பிரக்ஞையின் பால் மிகுந்த சிரத்தை காட்டி, தனது பணிகளை சலீம் முன்னெடுத்து வந்திருக்கிறார்.

பிரதானமாக அம்பாறை மாவட்டத்தை தனது களமாகக் கொண்டு செயற்பட்டு வந்த போதிலும், ஊடகவியலாளர்களின் உரிமைகள் மற்றும் நலன்களுக்காக குரல்கொடுக்கும் பல்வேறு அமைப்புகளில் முக்கிய பங்கை வகித்த காரணத்தால், கிழக்கு மாகாணத்துக்கு அப்பால் வடமாகாணம், மலையகம், கொழும்பு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் தமிழ்பேசும் ஊடகவியலாளர்கள் மத்தியில் மிகுந்த நட்புரிமை கொண்டவராக சலீம் விளங்குகிறார்.

முஸ்லிம் மீடியா ஃபோரம், இலங்கை தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியம் ஆகியவற்றின் தாபக உறுப்பினரான சலீம், கிழக்கிலங்கை செய்தியாளர்கள் சங்கம், அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்கள் சம்மேளனம், தென்கிழக்கிலங்கை செய்தியாளர்கள் சங்கம் ஆகியவற்றின் தலைவராகவும் இருந்தார். 15 வருடங்களாக நிந்தவூர் மத்தியஸ்த சபையின் உறுப்பினராக இருந்துவரும் இவர், தற்போது நிந்தவூர் கலை இலக்கியப் பேரவையின் உப தலைவராக செயற்படுகின்றார்.

சலீமின் பத்திரிகைத்துறை சேவைக்காக அவர் பல்வேறு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டு இருக்கிறார். 'கலாபூசணம் விருது' (2008), இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கமும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் இணைந்து வருடாந்தம் வழங்கும் 'வாழ்நாள் சாதனையாளர் விருது' (2017), கல்முனை மாநகர சபையின் 'ஊடக முதுசம் பட்டம்' என்பவை அவருக்கு கிடைத்த மிகவும் குறிப்பிடத்தக்க விருதுகளாகும்.

பத்திரிகைத்துறையில் சலீம், 50 வருடங்களைப் பூர்த்திசெய்ததை முன்னிட்டு, சில வருடங்களுக்கு முன்னர் அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்கள் சம்மேளனம் விமரிசையாகப் பெருவிழா எடுத்து, அவரைக் கௌரவித்ததுடன் 'பொன்விழாக்காணும் சலீம்' என்ற சிறப்பு மலரையும் வெளியிட்டது.

**கிழக்கு மாகாணத்துக்கு அப்பால் வடமாகாணம், மலையகம், கொழும்பு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் தமிழ்பேசும் ஊடகவியலாளர்கள் மத்தியில் மிகுந்த நட்புரிமை கொண்டவராக சலீம் விளங்குகிறார்**

சலீம் போன்ற மிகவும் நீண்டகால பிராந்திய செய்தியாளர்களின் அனுபவங்கள், இன்றைய இளம் தலைமுறை ஊடகவியலார்களுக்கு முன்னுதாரணமாக அமையக்கூடியவை. இன்னும் மூன்று வருடங்களில் சலீமின் பத்திரிகைத்துறை வாழ்வு ஆறு தசாப்தங்களைப் பூர்த்திசெய்யும். இந்த நீண்டகால அனுபவங்களை அவர் எழுதி, நூல் வடிவில் கொண்டுவரவேண்டும். இது அவரது 75 ஆவது பிறந்த தினத்தில் நான் முன்வைக்கும் கோரிக்கையாகும்.

வீரகத்தி தனபாலசிங்கம்

## டொக்டர் குல்நார் பேகம் ஓய்வுபெற்றார்

எம்.யூ.எம் சனூண்

டொக்டர் ஏ.எச். குல்நார் பேகம், தனது 27 வருட சேவைக் காலத்தில், 23 வருடங்கள் புத்தளம் ஆயுர்வேத வைத்தியசாலையில் சேவையாற்றிய திருப்தியுடன் , ஓய்வுபெறுகின்றார்.

1998இல் இவர் புத்தளம் ஆயுர்வேத வைத்தியசாலையில் சேவைக்கு வந்த போது, ஒரு வைத்தியரும் ஓர் ஊழியருமாக வெளிநோயாளர் பிரிவை (OPD) மாத்திரம் கொண்ட மத்திய மருந்தகமாக இருந்தது. அதனை வைத்தியசாலையாக தரமுயர்த்த தொடர் முயற்சிகளை அவர் மேற்கொண்டார். அவரின் முயற்சியின் பயனாக, வடமேல் மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் எம்.



எச்.எம் நவவி, 2004இல் வைத்தியசாலையாக தரமுயர்த்தினார்.

தற்போது இங்கு Community Medical Officers உட்பட 12 மருத்துவர்கள், 16 ஊழியர்கள் சேவையாற்றி வருகின்றனர். அத்துடன் Special Clinics, Skin, Orthopedic, Cupping, Leach Therophy, N.C.D Clinic போன்ற சேவைகளும் இங்கு வழங்கப்படுவதற்கு டொக்டர் ஏ.எச்.குல்நார்

**புத்தளம் ஆயுர்வேத வைத்திய சாலையின் பிரதம பொறுப்பாதிகாரியான டொக்டர் குல்நார் பேகம், இந்த வைத்தியசாலையில் இருந்து பிரித்துப் பார்க்க முடியாத பன்முக ஆளுமை கொண்டிருந்தார்**

பேகம் காரணகர்த்தா ஆவார். இவர் ஓய்வு பெறும்போது, புத்தளம் ஆயுர்வேத வைத்தியசாலையின் பிரதம பொறுப்பாதிகாரியாக பதவிவகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

டொக்டர் குல்நார் பேகம், புத்தளம் ஆயுர்வேத வைத்தியசாலையில் இருந்து பிரித்துப் பார்க்க முடியாத பன்முக ஆளுமை கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# ‘நிபா’வுக்கு முகங்கொடுக்க முன்கூட்டியே தயாராகுவது சிறந்தது

கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதியாக பதவியேற்ற ஆறு மாதங்களுக்குள் கொவிட்-19 தொற்று பரவுவதற்கு முன்னரே எதிர்க்கட்சிகள் மட்டுமன்றி, ஆளும் கட்சிக்குள் இருந்தவர்களும் அமைச்சரவைக்குள் இருந்தவர்களில் சிலரும், கொவிட்-19 பெருந்தொற்று நாட்டுக்குள் நுழைவதை தடுப்பதற்கும், பரவாமல் இருக்கவும் பல்வேறான ஆலோசனைகளை முன்வைத்தனர்; அமைச்சரவைக்குள் எடுத்துரைத்தனர்; முன்கூட்டிய வழிமுறைகள் தொடர்பிலான ஆலோசனைகளை பாராளுமன்றத்தின் ஊடாக முன்வைத்தனர்.

எனினும், எதற்கும் செவிசாய்க்காத ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அடுத்தவர்களின் யோசனையை கேட்காது. தான் நினைத்ததை மட்டுமே செய்ததமையால், கொவிட்-19 பெருந்தொற்றை ஒழிப்பதற்கு கடுமையான சிரமங்களுக்கு முகங்கொடுத்தார்.

அதில் ஆரம்பித்து, பொருளாதார நெருக்கடிக்குள் விழுந்து, ஜனாதிபதி பதவியை விட்டோட வேண்டிய நிலைமைக்கு அவருக்கு ஏற்பட்டது. இது, ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியவர்களும், பாராளுமன்றம் மற்றும் அமைச்சரவைக்குள் வழங்கிய ஆலோசனைகளை செவிசாய்க்காமையும் பிரதான காரணங்களாக இருந்தன.

ஓரிரு மாதங்களுக்கு மட்டுமே மூடியிருக்க வேண்டிய நாட்டை, ஒன்றரை வருடங்களுக்கு மேலாக மூடவேண்டிய நிலைமைக்கு ஜனாதிபதியே முக்கிய காரணமாக இருந்தாரென உள்வீட்டில் இருந்தே குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

இதேவேளை, கொவிட்-19 பெருந் தொற்றுக்கு உள்ளாகி, மரணித்தவர்களின் ஜனாஸாக்களை எரியூட்டியமையால் இஸ்லாமிய நாடுகளை பகைத்துக்கொள்ள வேண்டிய நிலைமையும் அவருக்கு ஏற்பட்டதென விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டமை அறிந்ததே.

இதனால் நாட்டில், ஏற்றுமதி, இறக்குமதி தடைபட்டது. பொருளாதார ரீதியில் பல்வேறான பாதிப்புகளைச் சந்திக்க நேர்ந்தது. குறிப்பாக, மக்களுக்கு நிவாரணங்களை வழங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. வருவாயின்றி, செலவு செய்யவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டது. பிரதான ஏற்றுமதி வருவாயாக இருந்த ஆடைத்தொழிற்சாலைகள் இழுத்து மூடப்பட்டன. எனினும், தேயிலை தொழிற்றுறை தாக்குப்பிடித்தது. உழைப்பாளர்களாக இருந்த தொழிலாளர்களுக்கு எவ்விதமான மேலதிக வருமானமும் கிடைக்கவில்லை என்பது கவலையாது.

“நாங்கள் சொல்லும் போதே, விமான நிலையங்களையும், நாட்டையும் இழுத்து மூடியிருந்தால், பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது” என சஜித் பிரேமதாஸ தலைமையிலான பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் கட்சி குற்றஞ்சாட்டியது.

அதற்குப் பின்னர், வெளிநாடுகளில் இனங்காணப்பட்ட பிறழ்வுகள், இலங்கையிலும் இனங்காணப்பட்டன. இந்தியாவில் இருந்து வந்தவர்களில் பலர், கொரோனா தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர்.

இந்தியா- கேரளாவில் ‘நிபா’ வைரஸ் பரவல் அதிகரித்துள்ளதை அடுத்து, ஊரடங்கு நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ‘நிபா’ வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு இருவர் இறந்துள்ளனர். நால்வருக்கு மேல் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளமை இனங்காணப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ‘நிபா’ வைரஸ் பாதிப்புகள் இல்லை என்றாலும் கேரளாவை ஒட்டியுள்ள தமிழக மாவட்டங்களில் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தத் திட்டமிட்டுள்ளது. அந்த ‘நிபா’ வைரஸ், இலங்கைக்குள் நுழையவிடாது முன்கூட்டியே நடவடிக்கை எடுப்பதே சிறந்தது என நாம் சுட்டிக்காட்டுகின்றோம்.


# தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# இலங்கையில் மரணதண்டனைச் சட்டம்



ஜெயக்காந்தன் கனிஷ்ரா
ஊடகக்கற்கைகள் துறை
யாழ்.பல்கலைக்கழகம்


சுமார் 43 ஆண்டுகளுக்குப் பின்னர், 2019ஆம் ஆண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை இரத்து செய்யுமாறு கோரி, பல அடிப்படை உரிமை மனுக்கள், தாக்கல் செய்யப்பட்டதனைத் தொடர்ந்து, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் மரணதண்டனையை நிறைவேற்றும் வகையில் தான் கையொப்பம் வைக்கப்போவதில்லை என சட்டமா அதிபரினூடாக அறிவித்துள்ளமையானது, இலங்கையில் மரணதண்டனை பற்றிய கண்ணோட்டம் என்ன என்பது பற்றி சற்று ஆராயத்தூண்டியுள்ளது.

புராதன காலம்தொட்டே, இலங்கையில் வெவ்வேறு வகையிலான மரணதண்டனை முறைமைகள் இருந்தபோதிலும், புத்தரது போதனைகளால் ஈர்க்கப்பட்ட இலங்கை அரசர்கள், தங்களது ஆட்சிக்காலத்தில் மரணதண்டனையை நிராகரித்துள்ளனர்.

அந்தவகையில், கி.பி முதலாம் நூற்றாண்டில் இலங்கையை ஆண்ட அமந்த காமினி அபய, மூன்றாம் நூற்றாண்டில் இலங்கையை ஆண்ட வொஹாரிக திஸ்ஸ, நான்காம் நூற்றாண்டின் இலங்கை மன்னன் ஸ்ரீ சங்கபோதி, பன்னிரெண்டாம் நூற்றாண்டில் இலங்கையை ஆண்ட பராக்கிரமபாகு போன்றோர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். (ஆயினும் களனி திஸ்ஸ, தாதுசேன, காசியப்பன் போன்றோர் மரணதண்டனை முறையை இறுக்கமாகக் கைகொண்டிருந்தார்கள்.)

1681ஆம் ஆண்டு குற்றவாளியொருவர் யானையால் மிதித்துக் கொல்லப்படும் காட்சியை, இலங்கைக்கு பயணம் மேற்கொண்ட வரலாற்றுப் பயணியான ரொபர்ட் நொக்ஸ் என்பவர் பதிவு செய்துள்ளார்.

பிரிட்டிஷ் ஆட்சியின்போது, இலங்கை குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 285ஆவது பிரிவின்படி, மரண தண்டனையும் உள்ளடக்கியதாக இருந்தபோதிலும், கொடூரமான முறைகளில் மரணதண்டனை விதிக்கப்படுவது தடை செய்யப்பட்டு, அப்போதைய இலங்கை ஆளுநரான பிரெடரிக் நோத்தால் தூக்கிலிடும் முறை அமல்படுத்தப்பட்டது.



பொதுமக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தும் வகையில், பொது இடங்களிலும் கோட்டைகளிலும் குற்றவாளிகளுக்கு தூக்குத் தண்டனைகள் நிறைவேற்றப்பட்டன. பின்னர் 1871ஆம் ஆண்டு, கொழும்பில் உள்ள வெலிக்கடை சிறையிலும், அதைத் தொடர்ந்து கண்டி போகம்பரை சிறையிலும் தூக்குமேடைகள் அமைக்கப்பட்டன.

இலங்கையில் தூக்குத்தண்டனை முறை நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னர், தூக்கிலிடும் குற்றவாளியை அதாவது கறுப்புத்துணியால் மூடப்பட்ட மரணதண்டனை கைதியின் தலையை, தூக்குக்கயிற்றில் நுழைத்து குறிப்பிட்ட தண்டனையை நிறைவேற்றுபவருக்கு கொடுக்கப்பட்ட பெயர்தான் ‘அலுகோசு’.

உண்மையில் அலுகோசு என்பது, சுமார் 15 ஆம் நூற்றாண்டில் இலங்கைக்குள் நுழைந்த போர்த்துக்கேயரின் போர்த்துக்கேய மொழிச் சொல்லாகும். போர்த்துக்கேய மொழியின் Algoz (மரணசாசனத்தின் சரத்துகளை நிறைவேற்றும் அதிகாரம் பெற்றவர்) என்ற சொல், காலப்போக்கில் Alugosu என மருவி அந்தச் சொல்லே சிங்களத்திலும் தமிழிலும் ‘அலுகோசு’ என்றானது.

மரணதண்டனை நவீன நீதி முறைகளின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு எதிரானது என்றும் அதை ஒழிக்கவேண்டும் என்றும் பல்வேறு கருத்துகள் வலுப்பெறத் தொடங்கிய பின்னர், பல நாடுகள் மரணதண்டனையை முற்றாக ஒழித்துவிட்டன.

பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளில், இப்போது மரணதண்டனை விதிக்கப்படுவது இல்லை. வேறு பல நாடுகளிலும் இது பற்றிய விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. பெரும்பாலான நாடுகள், மரண தண்டனையை ஒழித்திருந்தாலும், உலக மக்கள் தொகையில் 60 சதவீதத்துக்கும் அதிகமானோர் மரண தண்டனை தக்கவைத்துள்ள நாடுகளில் வாழ்கின்றனர்.

சுதந்திரத்திற்குப் பின்னும் இலங்கை சட்டத்தின் பிரகாரம் தூக்குத்தண்டனை முறைமை அமலில் இருந்தபோதிலும் 1956இல் பிரதமராக ஆட்சிக்கு வந்த எஸ். டபிள்யூ.ஆர்.டீ பண்டாரநாயக்கவால் மரணதண்டனை இல்லாமலாக்கப்பட்டது.

எனினும், அவரது படுகொலையைத் தொடர்ந்து 1959ஆம் ஆண்டு மீண்டும் மரணதண்டனை அமல்படுத்தப்பட்டது. எனினும் இத்தகைய தண்டனைகளுக்கு எதிராக, உலகம் பூராவும் வலுப்பெற்றிருந்த எதிர்ப்புகள் காரணமாக, 1976ஆம் ஆண்டு ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசிய கட்சி, மரணதண்டனை தொடர்பான சட்டக்கோவையில் ஏற்படுத்திய திருத்தங்களின் பிரகாரம், வழக்கினை விசாரிக்கும் நீதிபதி, சட்டமா அதிபர், நீதியமைச்சர் ஆகியோரின் ஒப்புதலுடன் ஜனாதிபதியின் ஒப்புதலும் அவசியமாக்கப்பட்டது.

இறுதியாக 23.06.1976 அன்று து.ஆ சந்திரதாஸ என்பவருக்கே மரணதண்டனை வெலிக்கடை சிறையில் நிறைவேற்றபட்டது என்பதுடன், 1978ஆம் ஆண்டுக்குப் பின்னர், ஆட்சிக்கு வந்த இலங்கை ஜனாதிபதிகள் எவரும், மரண தண்டனையை நிறைவேற்றுவது தொடர்பான தீர்ப்புகளை செயற்படுத்தும் வகையில் ஒப்புதல் வழங்கி கையெழுத்திட மறுத்துவிட்டனர்.

எனினும், மரணதண்டனைக்கு எதிரான பலத்த எதிர்ப்புகள் இருந்து வருகின்றபோதிலும் சட்டக்கோவையில் மரணதண்டனை இன்னுமே நீக்கப்படவில்லை என்பதால், இலங்கை சிறைகளில் தற்போது ஐநூறுக்கும் மேற்பட்ட மரணதண்டனை கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர் என ஆய்வில் வெளிவந்த புள்ளிவிவரம் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் தூக்கிலிட்டு மரணதண்டனை வழங்கும் வரலாற்றில், ‘மறு சிறா’ என்று அழைக்கப்படும் டி. ஜெ சிறிபால என்பவரது மரணம், இன்றுவரையில் சர்ச்சைக்குள்ளான ஒன்றாகவே காணப்படுகின்றது.

ஏனெனில், மிகவும் இளவயதினரான இந்தக் குற்றவாளி, மூன்றுமுறை சிறையிலிருந்து தப்பித்தமையால், மீண்டும் தப்பித்துவிடுவாரோ என்கிற அச்சத்தில், சிறைக்காவலர்களால் அதிகப்படியான மயக்க மருந்து கொடுக்கப்பட்டு, ஆழ்ந்த மயக்கத்திலுள்ள நிலையில், கண்டி போகம்பர சிறைச்சாலையில் வைத்து, தூக்கில் இடப்பட்டமையானது மிகுந்த சர்ச்சைகளை ஏற்படுத்தியது.

இந்தியா, அமெரிக்கா, இந்தோனேசியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஜப்பான், இலங்கை போன்ற நாடுகளைப்போலல்லாது மரண தண்டனையின் எண்ணிக்கையை இரகசியமாக வைத்திருக்கும் ஒரு நாடு சீனா என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் மரண தண்டனை வழங்குவது நடப்பில் இருந்தாலும், பத்து வருடங்களாக யாருக்கும் மரண தண்டனை வழங்கப்படாமல் இருந்தால் அவை ‘மரண தண்டனை ஒழிப்பு நடைமுறையில் இருக்கும் நாடுகள்’ என்று அழைக்கப்படும் எனவும் பொதுவாக கருதப்படுகின்றது.

இப்படியான வரலாற்று பின்னணிகளுடன் மரணதண்டனை என்ற விடயம் காணப்பட்டாலும், கடுமையான குற்றத்தை இழைக்கும் குற்றவாளிகளுக்கு நீதிமன்றத்தால் மரணதண்டனை வழங்கப்பட்டாலும் அது பெயரளவில் மாத்திரம் சட்டமாக காணப்பட, காலப்போக்கில் குறித்த தண்டனை ஆயுள்தண்டனையாக மாறும் போக்கே அதிகமாக காணப்படுகின்றது.



# வாழ்வியல் தரிசனம்

ஒருவரின் அல்லது பலரின் சுயமதிப்பை உடைப்பதற்கு என்றே சில விசமிகள் காத்திருக்கின்றார்கள். பொறாமை காரணமாக, பிறர் பற்றி அவதூறு பேசுவதையே குறியாகக் கொண்டிருப்பவர்கள் சமூக விரோதிகளாவர்.

வேண்டுமென்றே அபாண்டமான செய்திகளைப் பரப்புவது, பிறர் குடும்ப விடயங்களில் தலையிடுவது, வதந்தி பரப்புவது, எல்லாமே நடந்தபடிதான் இருக்கும். செவிகளைக் கண்டபடி நகர்த்தலாகாது. எல்லா விதமான மாந்தர்களும் எங்கள் முன்னால் உலாவருகின்றார்கள்.

எவருடன் நட்புக் கொள்வது? எவரைக் கண்டுகொள்ளாமல் விடுவது என்பதை உங்கள் அனுபவ ஞானம் மூலம் கண்டுகொள்ள முடியும். காலங்களைச் சரிவரப் பயன்படுத்த வேண்டும். மனிதன் மனிதனையே விழுங்குகின்ற காலம் இது. தங்கள் சுயநலத்துக்காக எதையும் செய்வார்கள். ஒருவரின் ஆளுமைகளை அனுபவங்களே சொல்லிக் கொடுக்கின்றன. இயற்கையாகவே மனிதர்களுக்கு புத்தி உண்டு; சிந்திக்கும் திறனும் உண்டு. நிதானம், ஆராய்வு, செயல் மாந்தர்களுக்கு பிரதானமானது.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# கடிதங்கள்

## அதிகரித்து செல்கின்றது தொல்லை

அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களின் பல பகுதிகளிலுமுள்ள பிரதான வீதிகளில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லையால் வாகன சாரதிகளும் பாதசாரிகளும் பாடசாலை மாணவர்களும் பெண்களும் முதியவர்களும் பலவிதமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

கட்டாக்காலி மாடுகளை மேய்ச்சலுக்கு விடுவோர், ஆய்ந்தோய்ந்து பாராமல் தமது பராமரிப்பிலுள்ள மாடுகளை விளைச்சல் நிலங்களிலும் மக்கள் பயன்படுத்தும் பாதைகளிலும் குறிப்பாக பிரதான வீதிகளில் விடுவதால் ஆபத்தான பல சம்பவங்கள் அண்மைக்காலங்களில் இடம்பெற்றுள்ளன.

வீதியில் பயணிக்கும் மோட்டார் சைக்கிள்களுக்கு முன்னால் இவை இந்தக் கட்டாக்காலிகள் பாய்வதால், விபத்துக்குள்ளாகி பலர் உயிரிழந்துள்ளதுடன் , அங்கவீனர்களாகவும் இந்தப் பிரதேசத்தில் பலர் வாழ்ந்து வருகின்றனர். மாநகர சபைகளாலும் ஏனைய பிரதேச சபைகளாலும் இவ்விடயம் தொடர்பாக பலமுறை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் தொடர்ச்சியான நிலையான திட்டமொன்று வகுக்கப்படாமையால் தொடர்ந்தும் இக் கட்டாக்காலிகள் பிரதான வீதிகளிலேயே திரிகின்றன.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனம் செலுத்துமாறு பிரதேச மக்கள் கேட்டுள்ளனர்.

அஸ்ஹர் இப்றாஹிம்



# அடிமைத்தனத்தால் பூத்த அடையாளங்கள்

பாலசுப்ரமணியம் சமீதா
ஊடகக்கற்கைகள் துறை
யாழ். பல்கலைக்கழகம்

**கடல் தாண்டி 'கள்ளத் தோணிகள்' என முத்திரை குத்தப்பட்டு, கள்ளம் கபடமில்லா மனதோடு உறவுகளையும் இழந்து, காடுகளை நாடுகளாக செதுக்கிய சிற்பிகளுக்கு 'தோட்டக்காட்டான்' எனும் புனைப்பெயர் குறியீடாக கொள்ளப்பட்டது.**

இப்புனை பெயரோடு தமக்கான சரித்திரங்களை படைத்தவர்கள், எண்ணில் அடங்காதவர்கள். இற்றைக்கு 200 வருட கால முடிவில் நின்று திரும்பி பார்த்தால், மனதாலும் உழைப்பாலும் உயர்வடைந்தோரின் தலைகள், ஆங்காங்கே நிமிர்ந்து கொண்டு தான் இருக்கின்றன.

கொத்தடிமைகளாக உள் நுழைந்து, கொத்தடிமைகளாகவே வெளியேறப் பிறந்தவர்கள் அல்ல; மாறாக, அடிமைகள் எனும் விதையிலிருந்து ஆல விருட்சமாக உருவான சனக் கூட்டமே, 'மலையகத்தான்' என்பதில் கர்வம் கொள்வதே மேலானது.

1818இல் தலைமன்னாரில் தரையிறங்கி, தமக்கான எவ்வித உடைமைகளும் இன்றி, உருக்குலைந்து சிதறி, நடைபோட்ட கூட்டம் மலையகத்தில் தஞ்சமடைந்தது. இவ்வாறு தஞ்சமடைந்த இடங்களைத் தாமே கொத்தடிமைகளாக இருந்து, காடுகளையும் மேடுகளையும் வளமாக்கினர். மலைகளாலும் இறப்பர், கோப்பி, தேயிலை போன்ற பயிர்ச்செய்கைகள் மூலமாகவும் மலையக மண்ணை விளைநிலங்களாக மாற்றிய பெருமை இவர்களுக்கே உண்டு.

> **தஞ்சமடைந்த இடங்களைத் தாமே கொத்தடிமைகளாக இருந்து, காடுகளையும் மேடுகளையும் வளமாக்கி, இறப்பர், கோப்பி, தேயிலை போன்ற பயிர்ச்செய்கைகள் மூலமாக மலையக மண்ணை, விளைநிலங்களாக மாற்றிய பெருமை இவர்களுக்கே உண்டு**

இலங்கைக்கு குடி வரவுகளாக வந்த இவர்கள், தமது பழக்கவழக்கங்கள், சம்பிரதாயங்கள், கூத்துக்கள், குலதெய்வ வழிபாடுகள் என்பவற்றையும் தம்மூடனேயே அழைத்து வந்தனர். ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில், அடிமைகளாக இருந்தாலும் தமக்கான தனித்துவத்தை ஆங்காங்கே பதித்துக் கொண்டுதான் வந்தனர். கொத்தடிமைகளாகவே தன் வாழ்வை நகர்த்தாமல், கல்வியாலும் ஜீவனோபாய தொழிலாலும் தம்மை மெருகேற்றிய வண்ணம், கால ஓட்டத்துக்கு ஏற்ப நடை போடத் தொடங்கினர்.

1947ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் இந்திய வம்சாவளி மலையகத்தவர்களின் பிரதிநிதித்துவம் ஏழு ஆக காணப்பட்டது. ஆனால், இதற்கு மாறாக 1948 இற்கு பிற்பட்ட காலங்களில், மலையக மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டு, பிரஜா உரிமை சட்டம் மூலம் 'நாடற்றவர்களாக' மாற்றப்பட்டனர். இவ்வாறாக தமக்கான எவ்விதமான உரிமைகளும் இன்றி, அடையாளப்படுத்தப்படாத பிரஜைகளாக அன்றாட வாழ்வை இவர்கள் நகர்த்திச் சென்றனர்.

1964ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 'ஸ்ரீமா - சாஸ்த்ரி' ஒப்பந்தத்தின் விளைவாக, 1967ஆம் ஆண்டு கொத்தடிமைகளாக வந்த சிலர், இந்தியாவுக்கே மீள அனுப்பப்பட்டனர். இவ்வாறு அனுப்பப்பட்ட சூழ்நிலைகள் இன்றளவிலும் பிரிவுகளின் துயரங்கள், மக்களின் மனதில் மாறா வடுக்களாகவே பதிந்துள்ளன. தமது சொந்த பந்தங்களை இழந்து, தமக்கான குடியுரிமையும் இல்லாது அரசாங்கத்தின் பிடியிலிருந்து விடுபட முடியாமலும், பல இன்னல்களுக்கு ஒரே சமயத்தில் முகம் கொடுக்க நேரிட்டாலும், தமது 'மலையகத்தான்' என்ற அடையாளத்தை விட்டு விலகவே இல்லை.

மலையகப் பெருந்தோட்டப் புறத்தைப் பொறுத்தவரையில், கல்விச் செயற்பாடுகளில் படிப்படியாக முன்னேறி, பாரிய மாற்றங்களை மலையகம் உள்வாங்கத் தொடங்கியது. இதன் ஆரம்ப காலகட்டத்தில் '1930ஆம் ஆண்டு), இலங்கையின் கல்வி தேசிய மயமாக்கப்பட்டது. ஆனால், 1960ஆம் ஆண்டே பெருந்தோட்டப் பகுதிகளின் கல்வி தேசிய மயமாக்கலில் இணைக்கப்பட்டது. இவ்வாறான காலம் பிந்திய இந்நடவடிக்கை, மலையக சமூகத்தின் வளர்ச்சிக்கு தடையாகவே இருந்தது. இவ்வாறான தடைகளையும் நம் மக்கள் பெரிதாக பொருட்படுத்தவே இல்லை.

தொழிலின் நிமித்தம் மேலைத்தேயரால் அழைத்துவரப்பட்ட நம் சமூகத்தினரிடம், அவர்களது கட்டளைகளை மொழிபெயர்க்க நம்மில் ஒருவர் அவர்களது மொழியை கற்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இதற்காக 'பெரியாங்கங்காணி' என அழைக்கப்பட்ட தலைமை கங்காணிமார்களுக்கு ஆங்கில மொழியை கற்பிப்பதன் வழியில், மலையக கல்வி வளர்ச்சி அடையத் தொடங்கியது.

அதன் பிற்பட்ட காலங்களில், மலையக மக்கள் மத்தியில் தமது மதத்தைப் பரவச் செய்வதற்காக, ஆங்கில கல்வியை இவர்களுக்குள் உள்நுழைத்தமை மலையக மாணவர்களிடத்தில் ஆரம்பக் கல்வியாகவும் தொடர்ந்தது.

இவ்வாறானதோர் ஆரம்பம், மலையகப் பகுதிகளின் பெற்றோர்களது துன்பம் நிறைந்த அடிமை தொழில், தமது பிள்ளைகளுக்கும் ஏற்படக்கூடாது என்ற எண்ணப்பாடு, மலையக கல்வியை தூண்டி விட ஒரு தீப்பொறியாக அமைந்தது.

ஆங்கில கல்வி மூலமாக தொழிலுக்கான அடிப்படை கல்வியைப் பெற்று, படிப்படியாக கல்வித்துறையில் மலையக மானவர்களே அரசசார் தொழிலுக்கும் சேவை நிலை தொழிலுக்கும் அதிகமாக உள்ளீர்க்கப்பட்டனர். கல்வித்துறையில் ஏற்பட்ட அதிவேக வளர்ச்சியால் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு, அங்கு மாணவர்கள் வயது அடிப்படையில் வகுப்பினர்களாக பிரிக்கப்பட்டு, நாட்டின் ஏனைய பிரதேச பாடசாலைகளுக்கு நிகராக மலையக பாடசாலைகளும் பயணிக்க ஆரம்பித்தன.

மேலும், மலையகத்தைப் பொறுத்தவரை எழுத்தாளர்கள் உருவாகி, உலகளாவிய ரீதியில் பிரபல்யம் அடைந்தவர்களாகவே வலம் வந்தனர். அன்டனி ஜீவா, கோ. நடேசய்யர், சாரல் நாடன், சீ.வி வேலுப்பிள்ளை, மல்லிகை சி. குமார், சிவனு இலட்சுமனனன், மீனாட்சியம்மாள் போன்ற பல எழுத்தாளர்களை மலையக மண் பிரசவித்தது.

மலையக எழுத்தாளர்கள் மத்தியில் தெளிவத்தை ஜோசப் முக்கிய இடம் பெறுகின்றார். இவர் இலங்கையின் சிறந்த சிறுகதை மற்றும் நாவலாசிரியராக விளங்குவதுடன் சிறந்த ஆய்வாளராகவும் வலம் வந்தவர் என்பது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். இவரைப் போலவே மலையக மண்ணுக்கும் அதன் தனித்துவத்துக்கும் உணர்வுகளுக்கும் உயிர் கொடுத்த எழுத்தாளர்கள் இன்று வரை உருவாகிய வண்ணமே உள்ளனர். அது மாத்திரமன்றி, கல்விமான்களின் உருவாக்கம் அதிகரித்து, தேசிய கல்வியியல் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகிச் செல்லக் கூடியவர்களின் எண்ணிக்கை மலையகப் பகுதிகளில் அதிகரித்து வந்துள்ளமை நாம் பெருமிதம் கொள்ள வேண்டிய முக்கிய விடயமாகும்.

இவ்வாறாக, கல்வி செயற்பாடுகளில் மாத்திரமன்றி விளையாட்டு, இசை, அரசியல், சினிமா, அழகியல் போன்ற துறைகளிலும் தமக்கான தனித்துவ அடையாளங்களைப் பதித்த வண்ணம் இளைஞர் சமுதாயம் முன்னேறிய வருகின்றமையும் பிறருக்கு எடுத்துக்காட்டாகவும் விளங்குகின்றது.

> **கொத்தடிமைகளாக வந்த தடத்தை அழித்து, தம்மைத் தாமே புதிய மனிதர்களாக செதுக்கிய வண்ணம், இன்றைய மலையக மைந்தர்கள் வீர நடை போடுகின்றனர். 1000 ரூபாய் சம்பளத்துக்காக ஒருபுறம் போராடிக் கொண்டிருந்தாலும் மறுபுறம், நாம் நமக்கான முன்னேற்றப் பாதையை நாமே உருவாக்கி, நடைபோட எத்தனித்துச் செல்வதே, நமது எதிர்கால இலட்சியமாக என்றுமே கொள்ள வேண்டும். இவ்வாறான முற்போக்கான சிந்தனையோடு பயணிக்க, 'மலையகத்தான்' என்ற அடையாளத்துடனேயே களம் காண்போம்**

கொத்தடிமைகளாக வந்த தடத்தை அழித்து, தம்மைத் தாமே புதிய மனிதர்களாக செதுக்கிய வண்ணம், இன்றைய மலையக மைந்தர்கள் வீர நடை போடுகின்றனர்.

பல்வேறுபட்ட துறைகளில் தடம் படித்த 'மலையகத்தான்', அரசியல் துறையிலும் தமது செல்வாக்கை ஓரளவு வெளிப்படுத்தி வந்தனர். அதாவது, நம் மலையக அரசியலின் ஆரம்ப கர்த்தாவாக 1947இல் இலங்கை பாராளுமன்றம் சென்று குரல் கொடுத்த சி.வி வேலுப்பிள்ளை முக்கியமானவராவார். இதனோடு இலங்கை வாழ் மலையகத் தமிழர்களின் நலனுக்காக குரல் கொடுத்த கோ. நடேச ஐயர் முதல் மலையகத் தமிழர்களின் துயர் துடைக்க முனைந்தவர்களான அப்துல் அசீஸ் வரையிலும் கடந்த 50 ஆண்டுகளாக அரசியல் களத்தில் தவிர்க்க முடியாத தலைவராக விளங்கிய சௌமியமூர்த்தி தொண்டமான், கே.ராஜலிங்கம், பி. வைத்தியலிங்கம் போன்ற தலைவர்களும் முக்கியமான இடத்தை வகிக்கின்றனர். இவ்வாறாக, இன்றளவிலும் மலையக அரசியலிலும் ஆங்காங்கே சில வெற்றித்தடங்களும் வரலாறுகளும் படைக்கப்பட்ட வண்ணமே உள்ளன.

இந்திய வம்சாவளிகளாக வந்து, 'மலையகத்தான்' என அடையாளப்படுத்தப்பட்டு, கொத்தடிமைகள் என்ற போர்வைக்குள்ளே நம் வாழ்வை நகர்த்தாமல், கொத்தடிமைகள் எனக் கொள்ளப்பட்ட அறியாமை என்ற போர்வையை கல்வி, விளையாட்டு, அரசியல், அழகியல், கவியாற்றல், இசை, சினிமா போன்ற பல்வேறு துறைகளில் கொண்டு தகர்த்தெறிந்து, தமக்கான ஒரு தனித்தன்மையை அடையாளப்படுத்தி, நம் சமூகம் மிளிர்ந்த வண்ணமே உள்ளது.

இவற்றோடு மாத்திரம் நம் சாதனைகள் ஒடுங்கிவிடாது. இன, மத, மொழி ரீதியாக புறக்கணிக்கப்பட்ட நாம், இன்றளவில் பெரும்பாலாக பேசப்படுவதற்கு மலையகத்தின் புத்திஜீவிகள் உலகளாவிய ரீதியில் தடம் பதித்து காணப்படுவதும் முக்கிய அம்சமாகும்.

1000 ரூபாய் சம்பளத்துக்காக ஒருபுறம் போராடிக் கொண்டிருந்தாலும் மறுபுறம், நாம் நமக்கான முன்னேற்றப் பாதையை நாமே உருவாக்கி, நடைப்போட எத்தனித்துச் செல்வதே, நமது எதிர்கால இலட்சியமாக என்றுமே கொள்ள வேண்டும். இவ்வாறான முற்போக்கான சிந்தனையோடு பயணிக்க, 'மலையகத்தான்' என்ற அடையாளத்துடனேயே களம் காண்போம்.





## கல்முனை முருகன் தேவஸ்தான தேர்த் திருவிழா

கல்முனை நகர் ஸ்ரீ முருகன் தேவஸ்தான பிரமோட்சவ விழா 02.09.2023ஆம் திகதி கொடியேற்றதுடன் ஆரம்பமாகி, புதன்கிழமை (13) தேர்த்திருவிழா நடைபெற்றது.
பிரமோட்சவ விழா, வியாழக்கிழமை (14) நடைபெறும் தீர்த்தோற்சவத்தை தொடர்ந்து கொடியிறக்கத்துடன் நிறைவு பெறவுள்ளது.

பாறுக் ஷிஹான்















## வில்லூன்றி கந்தசுவாமி தேர்


திருகோணமலை அருள்மிகு வில்லூன்றி கந்தசுவாமி கோவிலின் வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த் திருவிழா, புதன்கிழமை (13) காலை நடைபெற்றது.

அ. அச்சுதன்

## நல்லூர் தேர்

வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த மகோற்சவ தேர்த்திருவிழா புதன்கிழமை (13) காலை மிகச் சிறப்பாக நடைபெற்றது.
காலை 6 மணியளவில் விசேட பூஜை வழிபாடுகள் ஆரம்பமாகி, தொடர்ந்து ஆறுமுக பெருமான் வள்ளி தெய்வானை சமேதரராய், காலை 07.15 மணிக்கு தேரில் ஆரோகணித்து, பக்தர்களுக்கு அருட்காட்சி அளித்தார்.
தேரில் வெளிவீதி உலா வந்த ஆறுமுக பெருமான், காலை 8.45 மணிக்கு தேர் இருப்பிடத்தை வந்தடைந்தார்.
தேர்த்திருவிழாவின் போது, நாட்டின் பல பாகங்களில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் கலந்து கொண்டனர்.
அதேவேளை, ஆயிரக்கணக்கான அடியவர்கள் அங்க பிரதட்சணம் செய்தும் நூறுக்கணக்கானவர்கள் காவடிகள் எடுத்தும், கற்பூர சட்டிகள் ஏந்தியும் முருகப் பெருமானை வழிப்பட்டனர்.
வியாழக்கிழமை (14) காலை 7 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது. நல்லூர் மகோற்சவம் கடந்த 21ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து மகோற்சவ திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.
வியாழக்கிழமை (14) மாலை 5 மணிக்கு கொடியிறக்கம் நடைபெறவுள்ளது. அத்துடன் மகோற்சவ திருவிழாக்கள் நிறைவுபெறும்.

எம். றொசாந்த்









தெலுங்கானா

# பயணிகளை கவரும் ரயில் கோச் உணவகம்



தெலுங்கானா மாநிலத்தில் செகந்திராபாத் நெக்லஸ் சாலை ரயில் நிலைய வளாகத்தில் 'ரயில் கோச் உணவகம்' ஒன்றைத் தெற்கு மத்திய ரயில்வே தொடங்கி உள்ளது.

நெக்லஸ் ரோடு ரயில் நிலையத்தை சுற்றி நிறைய சுற்றுலா இடங்கள் உள்ளன. தினமும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். பயணிகளுக்கு தனித்துவமான உணவு அனுபவத்தை வழங்குவதற்காக, பயன்படுத்தப்படாத ஒரு பெட்டி முற்றிலும் நவீன மற்றும் அழகியல் உட்புறங்களுடன் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

"ரயில் கோச் உணவகத்தின்" பராமரிப்பு ஐதராபாத் பூமராங் உணவகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. ஐதராபாத்தில் உள்ள பிரபலமான இடங்களில் ஒன்றாக அமைந்திருக்கும் இந்த கோச் உணவக முயற்சியானது பயணிகளுக்கு மறக்க முடியாத உணவு அனுபவத்துடன் மீண்டும் இங்கு வரவேண்டும் என்று ஏக்கத்தையும் வரவழைக்கும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.



## ஆசியக் கிண்ணம்: இலங்கையை வென்று

# இறுதிப் போட்டியில் இந்தியா

ஆசியக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டிக்கு இந்தியா தகுதி பெற்றுள்ளது.

ஏற்கெனவே பாகிஸ்தானை சுப்பர் 4 சுற்றுப் போட்டியில் வென்ற இந்தியா, கொழும்பு ஆர் பிரேமதாஸ மைதானத்தில் செவ்வாய்க்கிழமை (12) நடைபெற்ற இலங்கை உடனான சுப்பர் 4 சுற்றுப் போட்டியில் வென்றதைத் தொடர்ந்தே இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இந்தியா

இந்தியா: 213/10 (49.1 ஓவ. ) (துடுப்பாட்டம்: றோஹித் ஷர்மா 53 (48), லோகேஷ் ராகுல் 39 (44), இஷன் கிஷன் 33 (61), அக்ஸர் பட்டேல் 26 (36) ஓட்டங்கள். பந்துவீச்சு: டுனித் வெல்லலாகே 5/40, சரித் அஸலங்க 4/18, மகேஷ் தீக்ஷன1/41)

இலங்கை: 172/10 (41.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: டுனித் வெல்லலாகே ஆ.இ 42 (46), தனஞ்சய டி சில்வா 41 (66) ஓட்டங்கள். பந்துவீச்சு: குல்தீப் யாதவ் 4/43, இரவீந்திர ஜடேஜா 2/33, ஜஸ்பிரிட் பும்ரா 2/30, ஹர்டிக் பாண்டியா 1/14, மொஹமட் சிராஜ் 1/17)

போட்டியின் நாயகன்: டுனித் வெல்லலாகே

இந்நிலையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு மெய்நிகர் அரையிறுதிப் போட்டியில் பாகிஸ்தானை இலங்கை எதிர்கொள்ளவுள்ளது. இப்போட்டி மழை காரணமாகத் தடைப்பட்டால் மேம்பட்ட ஓட்ட விகிதம் காரணமாக இறுதிப் போட்டிக்கு இலங்கை தகுதி பெறும்.

தெலுங்கானா

# பிரியாணி 'ருசி' இல்லை எனக்கூறியவர் கொலை



தெலுங்கானா மாநிலம், ஐதராபாத் தராபாத், பஞ்சகுட்டா அடுத்த சந்திராயன் குட்டாவை சேர்ந்த 30 வயதானவர். அதே பகுதியிலுள்ள ஹோட்டலுக்கு தனது நண்பர்களுடன் பிரியாணி சாப்பிட சென்றுள்ளார்.

பிரியாணியானியை சாப்பிட்டுக்கொண்டிருந்த அவருடைய நண்பர்கள் பிரியாணி ருசியாக இல்லை என ஹோட்டல் ஊழியரிடன் தெரிவித்தனர்.

இதனையடுத்து ஹோட்டல் ஊழியர்களுக்கும் அவர்களுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டு கைகலப்பாக மாறியது. சரமாரியாக தாக்கிய ஊழியர்கள் அவர்களை தூக்கி வெளியே வீசியுள்ளனர்.

இதில், 30 வயதானவர் படு காயமடைந்தார். சக நண்பர்கள் அவரை வைத்தியசாலையில் அனுமதித்தனர். எனினும், ஏற்கெனவே இறந்துவிட்டார் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

விடயத்தை அறிந்த பொலிஸார், சம்பவம் தொடர்பில் வழக்கு பதிவு செய்து ஹோட்டல் ஊழியர்களிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இங்கிலாந்து



# 70 வது பிறந்த நாளில் அதிர்ஷ்டம்

இங்கிலாந்தில் உள்ள டோர்கிங் பகுதியை சேர்ந்தவர் டோரிஸ் ஸ்டான்பிரிட்ஜ் என்ற பெண் தனது 70-வது பிறந்த நாளையொட்டி நேஷனல் அதிர்ஷ்ட இலாபச் சீட்டு வாங்கி கொண்டாடியுள்ளார். அவருக்கு அந்த அதிர்ஷ்ட இலாபச் சீட்டில் மெகா பம்பர் பரிசாக ஒவ்வொரு மாதமும் 10 ஆயிரம் பவுண்டுகள் (இலங்கை மதிப்பில் 40,20785.11) வீதம் 30 ஆண்டுகளுக்கு கிடைக்கும் என்ற வகையில் மெகா பம்பர் பரிசு கிடைத்துள்ளது.

அந்த மெயிலை பார்த்த போது அவர் 10 பவுண்டுகள் மட்டுமே பரிசு வந்ததாக நினைத்துள்ளார். ஆனால் தொடர்ந்து அந்த மெயிலை வாசித்த போது தான் அவருக்கு 30 ஆண்டுகளுக்கு மாதம் 10 ஆயிரம் பவுண்டுகள் வெற்றி பெற்றுள்ளது தெரியவந்துள்ளது.

போர்த்துக்கல்

# சாலைகளில் ஆறாக ஓடிய வைன்



தென்மேற்கு ஐரோப்பாவில் உள்ள நாடு போர்த்துக்கல். இதன் தலைநகர் லிஸ்பனில் இருந்து சுமார் 240 கிலோ மீட்டர் தொலைவில் சவோ லவுரென்கோ டோ பைர்ரோ பகுதியில் டெஸ்டிலேரியா லெவிரா எனும் மது உற்பத்தி தொழிற்சாலை செயல்பட்டு வருகிறது. இத்தொழிற்சாலையில் ரெட் வைன் எனப்படும் மது தயாரிக்கப்படுகிறது. இங்கு தயாரிக்கப்படும் மது, மிக பெரிய அளவிலான பீப்பாய்களில் தேக்கி வைக்கப்படும்.

இந்நிலையில் அவ்வாறு தேக்கி வைக்கப்பட்ட இரு பீப்பாய்கள் உடைந்ததால், அதிலிருந்த மது சாலைகளெங்கும் ஓடியது. இரத்த ஆறு போல சிவப்பு நிறத்தில் ஓடிய இதனை பலரும் வீடியோ எடுத்து சமூக வலைதளங்களில் வெளியிட்டனர்.

ஓடிய மதுவின் அளவு சுமார் 20 லட்சம் லிட்டர் (2.2 மில்லியன் லிட்டர்) இருக்கலாம் என்றும் சுமார் 20 லட்சம் மது போத்தல்களுக்கான கொள்ளளவு இருக்கும் என்றும் அந்நாட்டு பத்திரிக்கைகள் கணிக்கின்றன.

கர்நாடகா

# தலைமறைவானவர் 57 ஆண்டுகளுக்குப் பின் கைது

கர்நாடக மாநிலம் பீதர் மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர், மாடுகளை வளர்த்து வந்தார். இவருக்கு சொந்தமான 2 எருமை மாடுகள், கன்றுக்குட்டி ஒன்றை கடந்த 1965-ம் ஆண்டு மர்மநபர்கள் திருடிச் சென்றிருந்தனர். இதுதொடர்பாக அவர் பொலிஸில் புகார் அளித்திருந்தார். அதனடிப்படையில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களுக்கு நீதிமன்றத்தால் பிணை வழுங்கப்பட்டிருந்தது. இருவரும் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தலைமறைவாகியிருந்தனர். இருவரில் ஒருவர் 2006-ம் ஆண்டு இறந்துபோனார்.

மற்றையவர், 1965-ம் ஆண்டு கைதான போது அவருக்கு வயது 20. சில மாதத்திலேயே பிணையில் வந்த அவர், 57 ஆண்டுகள் தலைமறைவாக இருந்த நிலையில் 77 வயதில் கைது செய்யப்பட்டுள்ளார்.



## வட மாகாண ரீதியாக இடம்பெற்ற விளையாட்டு நிகழ்வில்

# சாதனை படைத்த மன்னார் புனித சவேரியார் சாதனையாளர் கௌரவிப்பு

■ எஸ். றொசேரியன் லெம்பேட்

வட மாகாண ரீதியாக இடம்பெற்ற பாடசாலை ரீதியான விளையாட்டு நிகழ்வில் வெற்றி பெற்ற மன்/ புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வானது, பாடசாலை அதிபர் அருட்சகோதரர் S.சந்தியாகு FSC தலைமையில் பாடசாலை மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது

இவ்விளையாட்டு நிகழ்வில் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி 80 புள்ளிகளைப் பெற்று ஆண்கள் பிரிவில் மன்னார் வலயத்தில் முதலாமிடத்தையும், மாகாண ரீதியாக இரண்டாமிடத்தைப் பெற்று மன்னார் வலயம் மாகாண ரீதியாக முதல் நிலையை பெற்றுக் கொள்ள வழிவகுத்திருந்தது. இந்த நிலையில் குறித்த மாகாண போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் தலைமையில் மன்னார் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஞானராஜ் பங்குபற்றுதலுடன் இடம் பெற்றது.

குறித்த மாகாண விளையாட்டு போட்டிகளில் புனித சவேரியார் கல்லூரி மூன்று தங்கப் பதக்கங்களையும், மூன்று வெள்ளி பதக்கங்களையும், இரண்டு வெண்கலப் பதக்கங்களையும், ஆறு நான்காமிடங்கள் மற்றும் இரண்டு ஐந்தாமிடங்களைப் பெற்று கொண்டது.

மேலும், குறித்த போட்டிகளில், 12 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான அஞ்சலோட்ட போட்டியில் புனித சவேரியார் கல்லூரி மாணவர் புதிய மாகாண சாதனையை நிலை நாட்டியதோடு,14 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் மாணவன் ப்ரோமியன் மாகாண சாதனையை சமன் செய்திருந்தார்.

## சப்ரகமுவ மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியின்

# ஈட்டி எறிதலில் கந்தலோயா பாடசாலை மாணவன் சாதனை




■ ரா. கமல்

சப்ரகமுவ மாகாண மட்ட 20 வயதுக்குட்பட்ட ஈட்டியெறிதலில் கந்தலோயா பாடசாலை மாணவன் எம். இர்ஷான் முதலாமிடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.

ஒரு தோட்டத் தொழிலாளியின் மகனாக 26 மாணவர்களுடன் போட்டியிட்டு களம் கண்ட ஒரே மாணவர் இர்ஷான் மாத்திரமே ஆகும்.

கந்தலோயா பாடசாலை விளையாட்டுத் துறை ஆசிரியர் T.கலைகமல் அவர்கள் இவரை பயிற்றுவித்து வழிநடத்தியுள்ளார்.

இர்ஷானுக்கு அகில இலங்கை மட்ட விளையாட்டுப் போட்டிக்கு பங்குப்பற்றுவதற்கு பாதணி, சீருடைகள் தேவையாக இருக்கிறது. நல்லுள்ளம் படைத்த நண்பர்கள் இருந்தால் தம்முடன் தொடர்புக் கொள்ளுமாறு பாடசாலை அதிபர் வேண்டுகோள்விடுத்துள்ளார். தொடர்புக்கு : எம். கருணாகரன் அதிபர், தொலைபேசி இல: 0778214906

அமெரிக்கா

# 4 ஆயிரம் அடி ஆழ குகையில் சிக்கிய வீரர்




உலகில் உள்ள குகைகளுக்கு சென்று ஆராய்வதில் ஆர்வம் கொண்டவர் மார்க் டிக்கி (வயது 40). இவர் அமெரிக்காவை சேர்ந்தவர். தென்துருக்கியின் டாரஸ் மலைத்தொடர் பகுதியில் 4 ஆயிரம் அடி ஆழம் கொண்ட மோர்கா குகையை ஆய்வு செய்யவதற்காக இயற்கை நல ஆர்வலர்கள் சிலரடன் குகையை சுற்றிப்பார்க்க இறங்கினர்.

இந்தநிலையில் 3 ஆயிரம் அடி ஆழத்தில் ஆராய்ச்சி மேற்கொண்டபோது திடீரென டிக்கிக்கு உடல்நலக்கோளாறு ஏற்பட்டது. இதனால் குகையில் இருந்து வெளியேற முடியாமல் சிரமப்பட்டார். இதுகுறித்து அவருடன் சென்ற குழுவினர் பேரிடர் மீட்புத்துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர்.

அதன்பேரில் இத்தாலி, ஹங்கேரி, பல்கேரியா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் இருந்து 200-க்கும் மேற்பட்ட மீட்புப்பணி நிபுணர்கள், டிக்கியை மீட்க துருக்கி விரைந்தனர். இந்த மீட்புப்பணியின்போது இரவு, பகல் பாராமல் பல்வேறு நாட்டை சேர்ந்த டாக்டர்களும் அந்த குகைக்குள் சென்று அவருக்கு சிகிச்சை அளித்தனர். இந்தநிலையில் 10 நாட்களுக்கு பிறகு மார்க் டிக்கி குகையில் இருந்து உயிருடன் பத்திரமாக மீட்கப்பட்டார். முதலுதவி சிகிச்சைக்கு பிறகு ஹெலிகாப்டர் மூலம் அவரை வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

# கூடைப்பந்தாட்ட தேசிய மட்டப் போட்டியில் காரைதீவு



■ வி.ரி. சகாதேவராஜா

தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றத்தால் நடத்தப்பட்ட இளைஞர் கழக மாவட்ட மட்ட கூடைப்பந்தாட்ட போட்டிகளின் இறுதிப் போட்டியில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை வென்று தேசிய மட்டப் போட்டிக்கு காரைதீவு பிரதேச செயலக பிரிவு அணி தெரிவானது.

அண்மையில் நடைபெற்ற இப்போட்டியில் காரைதீவு பிரதேச செயலகப் பிரிவு அணி சார்பாக ராமகிருஷ்ணா இளைஞர் அணி கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 14 செப்டெம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.